



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, திட்டம் – வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை சார்பிலான உயர் நிலை ஆய்வுக் கூட்டத்தை, தலைமைச் செயலகத்தில் நேற்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்தினார். திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்புகள், அவற்றில் நிறைவேற்றப்பட்டுள்ளவை – செயல்பாட்டில் இருந்து வருபவை, எதிர்காலத்தில் செயல்படுத்திய வேண்டிய திட்டங்கள் போன்றவை குறித்து அதிகாரிகள் – அலுவலர்களிடம் கேட்டறிந்தார். மேலும், இத்துறையின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களை, நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் நிறைவு செய்திடவும், புதியத் திட்டங்களுக்கான பணிகளை விரைந்துத் தொடங்கிடவும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தினார்.

## பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏன் தம்பி; குஜராத் மாநிலத்தில் 5,000 கோடி ரூபாய் மதிப்புள்ள போதைப் பொருள் பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறதே ?

**பட்டணம் :** **ஆமாம் அய்யா; குஜராத் மாநிலம் அங்கலேஷ்வரில் உள்ள மருந்து தயாரிப்பு நிறுவனத்தில் இருந்து 5,000 கோடி ரூபாய் மதிப்புள்ள ‘கோகைன்’ என்ற போதைப் பொருள் பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது. இதுபோன்று அங்கே பலமுறை நடந்திருக்கிறது.**

**இந்த மாதிரி போதைப் பொருள் பறிமுதல் தமிழ்நாட்டில் நடந்திருந்தால், ஆளும் தி.மு.க. மீது, எடப்பாடி குழுவினர் எகிறிக் குதித்திருப்பார்கள்; பா.ஜ.க.வினர் பம்மாத்து காட்டியிருப்பார்கள்.**

**ஆனால் குஜராத்தின் ஆளுங்கட்சி பா.ஜ.க. ஆயிற்றே, ஏதும் அறியாததைப் போலப் பதுங்கிக் கொள்வார்கள் !**

### கனிமொழி கருணாநிதி எம்.பி. முன்னெடுப்பில்

# தூத்துக்குடியில் ‘நெய்தல் கலை விழா’வின் நிறைவு நாள் நிகழ்ச்சிகள்!

## பல்வேறு கலை நிகழ்ச்சிகள் – புகைப்படக் கண்காட்சி – பரிசுகள் வழங்கல்!

தூத்துக்குடி, அக். 15 -

ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு கண்டுகளித்த நெய்தல் கலைவிழாவின் நிறைவு நாள் நிகழ்ச்சிகள் கழக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்றக் கழக குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி முன்னெடுப்பில் கடந்த இரண்டு ஆண்டுகளாக தூத்துக்குடியில் நெய்தல் என்ற பெயரில் தமிழர்களின் பாரம்பரிய கலைகளை வளர்க்கும் வகையில் பிரம்மாண்ட கலைத் திருவிழா நடைபெற்று வருவதன் தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாக இந்நிகழ்ச்சி தூத்துக்குடி எட்டயபுரம் சாலை, சங்கரப்பேரி பிரிவு அருகில் உள்ள மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

கடந்த இரண்டு நாட்கள் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் (13.10.2024 - ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்ற நிறைவு விழாவில் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் கலந்துகொண்டு உரையாற்றி, இந்நிகழ்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்கிய மற்றும் இந்நிகழ்ச்சிக்காக உழைத்தவர்களுக்கு நினைவு பரிசினை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற நெய்தல் கலைவிழாவின் நிறைவு நாள் நிகழ்ச்சியில் தூத்துக்குடி இசைப்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சி, சகா கலைக்குழு, அந்தோணி சாமியின் உவரி களியல் ஆட்டம், மார்த்தாண்டம் ஜெட் கிங் களரி குழு, பாப்பம்பட்டி பெரிய மேளம், கார்த்திக் தேவராஜ் இசைக்குழு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இதில் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரளாக கலந்துகொண்டு நெய்தல் கலைவிழாவினை கண்டு களித்தனர்.

முன்னதாக, நெய்தல் கலை விழாவையொட்டி நடைபெற்று வரும் புகைப்படக் கண்காட்சி அரங்கு, புத்தக அரங்கு மற்றும் நபார்டு வங்கியின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள பல்வேறு விற்பனை அரங்குகளை பார்வையிட்டு, சிறைக்கைதிகளுக்கு புத்தகங்கள் வழங்கிடும் வகையில் அமைக்கப் பட்டுள்ள அரங்கில் பல்வேறு புத்தகங்களை வழங்கினார்.

புகைப்படக் கண்காட்சியில் 1500 துணை படங்கள் தேர்வு செய்யப்பட்டு 18 வயதிற்கு மேற்பட்டோருக்கான பிரிவில் மிகச்சிறந்த புகைப்படத்திற்கு முதல் பரிசாக ரூபாய் 1 லட்சம் வெற்றி பெற்ற ரூபன் ராஜ், இரண்டாம் பரிசாக ரூபாய் 50,000 வெற்றி பெற்ற வே. சரவணக்குமார், ஆறுதல் பரிசாக தலா ரூபாய் ஐந்தாயிரத்தை கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் வழங்கினார்.

இதில், மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சரும், தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளருமான அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜி.வி.மார்கண்டேயன், எம்.சி.சண்முகையா மாவட்ட ஆட்சியர் இளம்பகவத், ராஜா, தமிழரசி, மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாநகராட்சி ஆணையர் மதுபாலன், கூடுதல் ஆட்சியர் ஐஸ்வர்யா, மாவட்ட வன அலுவலர் ரேவதி ராமன், தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஜெயபாலன், இ.எப்.ஐ. நிறுவனர் அருண் கிருஷ்ணமூர்த்தி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை!

# தாம்பரம் மாநகராட்சி அலுவலகத்தில் ஆய்வு!

## இ.கருணாநிதி எம்.எல்.ஏ. நடத்தினார்!

பல்லவபுரம், அக்.15-

தீவிரமடைந்து வரும் பருவ மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2 அலுவலகத்தில் பல்லாவரம் இ. கருணாநிதி எம்.எல்.ஏ தலைமையில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தாம்பரம் மாநகராட்சி பல்லாவரம் (மண்டலம்2) பகுதிகளில் தீவிரமடைந்து வரும் பருவ மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக குரோம்பேட்டில் உள்ள மண்டல அலுவலகத்தில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி தலைமையில் மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை முன்னிலையில் மாநகராட்சி அதிகாரிகள் மின்சார துறை அதிகாரிகள் மாமன்ற உறுப்பினர்கள் நல சங்க நிர்வாகிகள் ஆகியவர்களுடன் ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி தீவிரமடைந்து வரும் பருவ மழை தொடர்ந்து மாநகராட்சி அதிகாரிகள் பள்ளிகள் மற்றும் அனைத்து திருமண மண்டபங்களிலும் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் அங்கு ஜெனரேட்டர் வசதி ஏற்பாடு செய்து வேண்டும் மழை அதிகமடைந்து பள்ளிகள் மற்றும் மண்டபத்தில் தங்க வருபவர்களுக்கு உடனடியாக பாய் போர்வை பிஸ்கட் பிரட் போன்ற பொருட்களை வழங்க வேண்டும் அதைத் தொடர்ந்து அவர்களுக்கு வழங்க உணவுகளை தயார் செய்ய உணவு கொடுங்கள் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் தொற்று நோய்கள் பரவாமல் இருக்க நமது மாநகராட்சி ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலமாக மருத்துவ முகாம்களை அமைக்க தயார் நிலையில் இருக்க வேண்டும் என்றும் அதிகாரிகள் எந்த நேரத்திலும் வழியை பருவமழை எதிர்கொள்ள தயார் நிலையில் இருக்க வேண்டும் என்றும் 24 மணி நேரமும் என்னை என் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அதிகாரிகளோ பொதுமக்களோ நலச் சங்க நிர்வாகிகளோ மாமன்ற உறுப்பினர்களோ அழைக்கலாம் என சட்டமன்ற உறுப்பினர் கூட்டத்தில் தெரிவித்தார் அப்போது மாநகராட்சி உதவி ஆணையர் உதவி செயற்பொறியாளர் சுகாதார அலுவலர் வருவாய் அலுவலர் உதவி பொறியாளர்கள் மின்சாரத்துறை பொறியாளர்கள், நெடுஞ்சாலை துறை அதிகாரிகள் மாமன்ற உறுப்பினர்கள் பல்வேறு நலச்சங்கங்களை சேர்ந்த நிர்வாகிகள் ஆகியோர் பங்கேற்று பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்வதற்கான பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்கள்.





தீவிரமடைந்து வரும் பருவமழை முன்னெச்சரிக்கையாக தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2 அலுவலகத்தில் பல்லவபுரம் இ.கருணாநிதி எம்.எல்.ஏ. அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடத்தினார்.


அரசுப் பள்ளியில் பயின்று
தனது அறிவுத்திறத்தால் நாட்டின்
முதன் குடிமகன் ஆனவர்
அறிவியலாளர் அப்துல் கலாம் அவர்கள்.

மு.க.ஸ்டாலின்
தமிழ்நாடு முதலமைச்சர்

முன்னாள் குடியரசுத் தலைவர்
டாக்டர் ஏ.பி.ஜெ.அப்துல் கலாம்
அவர்களின்
94ஆவது பிறந்த நாள்



தமிழ்நாடு அரசின் சார்பில்
முன்னாள் குடியரசுத் தலைவர்
டாக்டர் ஏ.பி.ஜெ.அப்துல் கலாம்
அவர்களின் திருவுருவச் சிலைக்கு

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,
மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற,
சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர்,
உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்,
சீர்மிகு பெருமக்கள்
மலர்தூவி மரியாதை செலுத்துவார்கள்.

நாள் : 15.10.2024, செவ்வாய்க்கிழமை,
காலை 9.30 மணி
இடம் : அண்ணா பல்கலைக்கழக வளாகம்,
கிண்டி, சென்னை





tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை–600 009